பகுதிகளில் விளைச்சல் ஆறு அணுவுக்கு குறைவு என்று அனுவரி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதோ அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளி வைக்க மனுக்களை வாங்கி அனுப்புமாறு இராமநாதபுரம் மத்திய வங்கி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில் நான்கு கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய காலக் கடன்களை மத்திய கடன் களாக மாற்றுவதற்கு கேட்டுக்கொண்டதற்கிணங்க ரூ. 39,548 வழங்கப்பட்டது.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு ஆனால் விளைச்சல் ஆறு அணுவுக்குக் குறைவு என்ற அனுவாரி சான்றிதழ் வழங்கப்படாத பகுதிகளிலும் கடன் வசூலிப்பதில் கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது என்று அதிகாரிகள் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள். இந்த அறிவுரைகள் 30—6—1973 வரை அமலில் இருக்கும்.

திரு. கு. ஆண்டி என்ற குருசாமி : கூட்டுறவு முறையில் கொடுக்கப்பட்ட கடன்களைக் கெடுபிடியாக வசூல் செய்கிறார்கள். அப்படிக் கெடுபிடியாக வசூல் செய்யப்படுவது தடுத்து நிறுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எல்லா ஊர்களிலும் கெடுபிடி நடவடிக்கைகள் 30—6—1973 வரை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன.

3. தகவல் கோரல்.

அவை அலுவல் குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Today is the last day for the Demands and you will be guillotining all the Demands which are not voted at 1 O' clock. What I suggest is, there may be some change in the order of business. This resolution may be taken up at 1 O' clock. The Demand on Jails which was to have been taken up on the 22nd is just coming up today and there is a danger of that Demand being guillotined also. So, priority may be arranged in such a way that the Demand which was to have been taken on the 22nd may be taken up first and the other things next in order. After 1 O' clock this Resolution may be taken up.

THIRU R. PONNAPPA NADAR : I also agree to the suggestion made by the hon. Member Thiru K. T. K. Thangamani that the Resolution may be taken up after 1 O'clock after guillotining of Demands is over. There would be time before 1-30 and I think we can take the Resolution afterwards because there are only few Demands.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசினர் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

DR. H. V. HANDE : Supplementary Demands also will have to be guillotined at 1 O'clock tomorrow.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாளைக்கும் கில்லெட்டின் 1 மணிக்கு வரும்.

THIRU R. PONNAPPA NADAR : There are two amendments to the resolution.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசினர் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

4. அரசினர் தீர்மானம்.

அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "இன்று நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் குழு அமைப்பதற்கான அரசினர் தீர்மானம், நாளை 28—3—1973-ம் நாளன்று எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

THIRU K. T. K. THANGAMANI : I would like to know the order in which the Demands are going to be taken up. In the Order Paper the first is State Legislature, then Animal Husbandry and then Administation of Justice and Jails. So what I would suggest is, the Demands on Administration of Justice and Jails which was postponed to this day may be taken up first and the other Demands next in the order.